IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO 1, SATTUR

| | | |
|---|---|---|
| Calendar | ) | |
| | ) | |
| Miscellaneous | ) | |
| | ) | Case No. STC.753/2023 |
| Preliminary Register | ) | |
| | ) | |
| Sessions | ) | |

| | |
|---|---|
| | Prosecution pw2 |
| Deposition of witness for | Defence |
| | Court |

Name : பாக்கியராஜ்

Father's Name :

Village :

Taluk :

Calling :

Age :

1ம் எதிரி ஆஜர். 2ம் எதிரி ஆஜர் இல்லை. குவிமுச பிரிவு 317 தாக்கல் செய்து அனுமதிக்கப்பட்டுள்ளது. வழக்கறிஞர் ஆஜர்.

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 02.04.2024

நான் தற்பொழுது ஏழாயிரம்பண்ணையில் வசித்து வருகிறேன். நான் தச்சு வேலை செய்து வருகிறேன். அ.சா.1 விஸ்வகர்ம கைவினைஞர்கள் சங்க செயலாளராக உள்ளார். நான் உதவி செயலாளராக உள்ளேன். எதிரிகளை தெரியும். எங்கள் சமுதாயத்திற்கு சொந்தமான அங்காளஈஸ்வரி கோவில் ஏழாயிரம்பண்ணை கிராமத்தில் சங்கரன்கோவில் ரோட்டில் உள்ளது. இந்த கோவில் சம்மந்தமாக பழைய நிர்வாகிகளுக்கும், புதிய நிர்வாகிகளுக்கும் பிரச்சினை இருந்து வருகிறது. 2 1/2 வருடத்திற்கு மேலாக கோவில் பூட்டியுள்ளது. அது சம்மந்தமாக RDO விசாரணை நடந்து

வருகிறது. கோவில் சாவி எங்களிடம் உள்ளது. 14.03.2023ம் தேதி எதிரி சங்கர் கோவில் பூட்டை உடைப்பதாக வழிபோக்கர்கள், அ.சா.1க்கு தகவல் சொல்லியுள்ளார். உடனே நான், முனியசாமி, தலைவர் வேலுச்சாமி, பட்டமுத்து ஆகிய நான்கு பேரும் கோவிலுக்கு சென்று பார்த்தோம். அங்கு எதிரிகள் இருவரும் பூட்டை உடைத்து கொண்டு நின்றிருந்தனர். எங்களை பார்த்து அசிங்கமாக தேவிடியா மகனே என்று திட்டினார்கள். பூட்டை உடைப்போம் எங்களை யாரும் கேட்க முடியாது என்று சொன்னார்கள். கோவிலிருந்த மூன்று பூட்டு உடைக்கப்பட்டிருந்தது. ஒவ்வொரு பூட்டும் 100 ரூபாய்க்கு மேல் இருக்கும். நாங்கள் அவர்களிடம் யார் உங்களை உடைக்க சொன்னது என்று கேட்டதற்கு, அவர்கள் அப்படி தான் உடைப்போம் என்று சொன்னார்கள். அன்று காலையில் எதிரிகள் இருவரும் மது அருந்திவிட்டு பூட்டை நான் உடைக்கவா, நீ உடைக்கவா என்று பேசி கொண்டிருந்தனர். எதிரி ரெங்கநாதன் என்பவர் சங்கரை பார்த்து நீ பூட்டை உடை என்று சொல்லியுள்ளார். சம்பவம் அன்று காலை 11.00 மணியளவில் நடந்தது. பின்னர் எதிரி சங்கர் பழைய நிர்வாகி ஜோதி என்பவரிடம் பூட்டை உடைக்க போயுள்ளேன் என்று சொல்லியுள்ளார். எதிரி சங்கர் பக்கத்தில் உள்ள பட்டறை சென்று சின்ன வேலை இருப்பதாக சொல்லி சுத்தியலை வாங்கி பூட்டை உடைத்துள்ளார். இது சம்மந்தமாக முனியசாமி காவல் நிலையத்தில் புகார் அளித்தார்.

எதிரி தரப்பில் செய்யப்பட்ட குறுக்கு விசாரணை

எங்கள் சமுதாய மக்களிடமிருந்து பணம் வசூல் செய்து கட்டப்பட்ட கோவில் தான் அங்காளஈஸ்வரி அம்மன் கோவில் என்றால் சரிதான். ஊர் பொறுப்பாளர்களை ஊர் பொதுமக்கள் சேர்ந்து தான் தேர்ந்தெடுப்பார்கள் என்றால் சரிதான். எங்கள் சமுதாய மக்கள் இருதரப்பினராக உள்ளோம் என்றால் சரிதான். முனியசாமி, வேல்ச்சாமி மற்றும் நான் ஒரு பிரிவாகவும், எதிரி வேறு ஒரு பிரிவிலும் உள்ளார் என்றாலும் சரிதான். இரண்டு பிரிவாக இருப்பதால் கோவில் தற்சமயம் பூட்டியுள்ளது என்றால் சரிதான். கோவில் பூட்டப்பட்டுள்ளதால் வருவாய் கோட்டாட்சியர் இருதரப்பினரையும் அழைத்து பேச்சுவார்த்தை நடத்தினார் என்றால் சரிதான். தற்சமயம் எதிரி தரப்பினர் தான் ஊர் பொறுப்பில் உள்ளார்கள் என்றால் சரியல்ல. நாங்கள் தான் பொறுப்பாளராக உள்ளோம். எதிரி தரப்பினர் தான் ஊர் பொறுப்பாளராக உள்ளார்கள்

என்றாலும், நான் வழக்கிற்காக நாங்கள் தான் பொறுப்பாளராக உள்ளோம் என பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான், முனியசாமி சென்ற போது கோவில் பூட்டு உடைக்கப்பட்டிருந்தது என்றால் சரிதான். நான் உடனடியாக காவல் நிலையத்தில் ஒரு புகார் கொடுத்தேன் என்றால் முனியசாமி புகார் கொடுத்தார், நான் உடன் சென்றேன். அந்த புகாரில் நான், வேலுச்சாமி, பட்டமுத்து கையொப்பம் செய்தோம் என்றால் சரிதான். புகார் கொடுத்த பிறகு எங்கள் தரப்பினரையும், எதிரி தரப்பினரையும் காவல் நிலையத்தில் அழைத்து விசாரணை செய்தார்கள் என்றால் சரிதான். அவ்வாறு விசாரித்த போதும் கோவிலை திறக்க சொல்லி தான் போலீசார் அறிவுறுத்தினார்கள் என்றால் சரிதான். 1ம் எதிரி மது போதையில் என்னை அசிங்கமாக பேசியதாக சொல்லுவது பொய் என்றால் சரியல்ல. அதே போன்று கோவில் பூட்டு எப்போதுமே உடைக்கப்படவில்லை என்றால் சரியல்ல. கோவில் நிர்வாகத்தை எதிரிகள் தரப்பிலிருந்து கைப்பற்றப்பட வேண்டும் என்பதற்காக எதிரிகள் மீது இந்த பொய் புகாரை கொடுத்துள்ளோம் என்றால் சரியல்ல. அங்காளஈஸ்வரி கோவிலிருந்து சுமார் 500 அடி தெற்குபுறத்தில் வீடுகள் உள்ளன என்றால் சரியல்ல. கிழக்குபுறத்தில் தான் வீடுகள் உள்ளன. அங்காளஈஸ்வரி அம்மன் கோவில் சாத்தூரிலிருந்து சங்கரன்கோவில் செல்லும் ரோட்டில் உள்ளது என்றால் சரிதான். சாத்தூரிலிருந்து சங்கரன்கோவில் செல்லும் ரோட்டில் எப்போதும் ஆட்கள் நடமாட்டம் இருக்கும் என்றால் சரிதான். வழிபோக்கர்கள் வந்து என்னிடமும், முனியசாமியிடமும் தகவல் சொன்னதாக சொல்லுவது வழக்கிற்காக சொல்லும் பொய் என்றால் சரியல்ல. நான் சொல்லுவது போல் எந்த சம்பவமும் நடைபெறவில்லை என்றால் சரியல்ல.

மறுவிசாரணை – இல்லை.